# ‘கோட்சே’வின் வாரிசுகளை; எச்சரிக்கிறார் தமிழ்நாடு முதல்வர்!

இந்தியா ஒரு ஜனநாயக நாடு, மக்களாட்சி நடைபெறும் நாடு எனும் கருத்துக்கள் மெல்ல மெல்ல மறைய ஆரம்பித்து வருகிறது சர்வதேச அரங்கில்.

சமீபத்தில் சர்வதேச பொருளாதார ஆய்வுகளை மேற்கொள்ளும் நிறுவனமான மூடிஸ், நாட்டின் ஜி.டி.பிஜ அழுத்தி சொல்லாமல் மத சகிப்பின்மை நாட்டின் பொருளாதாரத்தை அழித்து விடும் என சொல்லியிருப்பது நிச்சயமாக கவலைப்படவேண்டிய ஒரு விஷயம்.

நாடு முழுவதும் ஒரு குழுவினரை தேசியவாதம், இனவாதம், மதவாதம் மூலம் சிறுபான்மையினருக்கு எதிராக திரட்டல்.

சிறுபான்மையினரின் உரிமைகள் பறிக்கப்படுதல், அரசின் வன்முறை, சிறுபான்மையினரை வெளியேற்றல்.

இனால் இந்தியாவின் பன்முக தன்மைக்கு தீங்கான செயல்கள் பல அரங்கேற்றப்படுகின்றன. தனியாக ஒரு நிகழ்வைக் காணும்போது அது கலவரமாகவோ, குழு விரோதமாக தோன்றலாம். ஆனால் பல நிகழ்வுகளை தொகுத்துப் பார்த்தோம் எனில் எவ்வாறு அதில் பாசிசம் மறைந்து வாழ்ந்துவருவதை கண்டறியலாம். ஹிட்லரின் பாசிசம் தேசியம் கலந்த இனவாதமாக இருந்தது. இனங்கள் ஒரு குறிப்பிட்ட தேசத்தின் அடையாளமாக இருந்தது. அதனால் அந்தப் பாசிசம் அந்த இனங்கள் வாழும் பகுதிக்கு மட்டும் பொருந்துவதாக இருந்தது. ஆனால் இந்தியாவின் பாசிசம்? இந்தியாவில் கட்டமைக்கப்பட்டு வரும் பாசிசம் தேசியம் கலந்த மதவாதம். மதங்களின் பரவல் அமைத்த இந்தியாவில் எவ்வாறு பாசிசம் கட்டமைக்கபட்டு வருகிறது என்ற வழிமுறைக்கு வருவோம்.

முதலில் ஹிட்லர் ஆட்சியல் நடந்தது போல இந்தியாவில் ஆர்.எஸ்.எஸ் எனும் அமைப்பு மறைமுகமாக சிறுபான்மையினரான இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் மீது வன்முறை வெறியாட்டங்களை செலுத்தியது. விளைவாக பாபர் மசுதி இடிப்பு, குஜராத் கலவரம், மும்பை கலவரம், ஒரிசாவில் தேவாலயங்கள் மீதான தாக்குதல் போன்றவை பல உயிர்களைப் பலிவாங்கியது. மேலும் இந்துக் கலாச்சாரமான பசு வழிபாடு, யோகா, புனித கங்கை வழிபாடு போன்றவற்றை மறைமுகமாக மக்களின் மீது திணிக்க முயற்சி மேற்கொண்டது.

மோடி தலைமையிலான பா.ஜ.க. ஆட்சி ‘குஜராத் மாடலை’ தேசியமயமாக்கியிருக்கிறது. எங்கெல்லாம் பா.ஜ.க. ஆட்சியைப் பிடித்து காலூன்றியுள்ளதோ, அங்கெல்லாம் நீண்ட காலமாக ஆர்.எஸ்.எஸ். வேலை செய்து பல்வேறு மதவெறிக் கலவரங்களை நடத்தியிருக்கின்றது. 11ஆண்டு காலத்தில் சுமார் 10 ஆயிரம் மதக் கலவரங்களை நடத்தியிருக்கின்றன சங்க பரிவார கும்பல்கள்.

**இசுலாமியர்கள் நிலை** : பெரும்பான்மை இந்துக்களுக்கும் இந்த நாட்டிற்கும் முசுலீம்களால்தான் ஆபத்து என்ற கருத்தை கிட்டத்தட்ட நூறாண்டுகளாகப் பிரச்சாரம் செய்துவருகிறது ஆர்.எஸ்.எஸ். முசுலீம்களுக்கு எதிரான கலவரங்களைக் கட்டமைப்பதற்காகவே காவி கும்பல் பல வழிகளில் வேலைசெய்கிறது. மாட்டுக் கறி, லவ் ஜிகாத், மதமாற்றம், நாட்டுக்கு எதிரான சதி என பல காரணங்களை வைத்துள்ளது. இவை ஒவ்வொன்றுக்கும் ஏற்றபடி பசுப்பாதுகாப்புப் படை, லவ் ஜிகாத் எதிர்ப்புப் படை என பல வன்முறை அமைப்புகளையும் கட்டிவைத்துள்ளது.

2016 தில்லியில் மாட்டுக்கறி வைத்திருந்தார் என்று கூறி அக்லக் என்ற முதியவர் அடித்தே கொல்லப்பட்டார். 2017ல் மாட்டைக் கடத்துவதாகக் கூறி ஹரியானாவைச் சேர்ந்த பால் வியாபாரி பெஹ்லுகான் இந்துமதவெறி குண்டர்களால் கொல்லப்பட்டார். மனித உரிமைக் கண்காணிப்பு அமைப்பின் 2019ம் ஆண்டின் அறிக்கைப்படி, அதுவரை குறைந்தபட்சம் 44 பேர் பசுப்பாதுகாப்பு குண்டர்களால் அடித்தே கொல்லப்பட்டுள்ளனர்.

2018 ஆம் ஆண்டு காஷ்மீரின் கத்துவா பகுதியில் எட்டு வயதேயான முசுலீம் சிறுமி கூட்டுப் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார். பாதிக்கப்பட்ட சிறுமி முசுலீம் என்பதாலும் வல்லுறவு குற்றவாளி இந்து என்ற ஒரே காரணத்திற்காகவும் குற்றவாளியைப் பாதுகாப்பதற்காக தேசியக் கொடியைத் தூக்கிக் கொண்டு ஊர்வலம் போனது பா.ஜ.க.

முசுலீம்களை நான்காந்தர குடிமக்களாக்க விழையும் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை எதிர்த்து இசுலாமிய மக்கள் நடத்திய ஷாகின்பாக் போராட்டங்களையும், ஜே.என்.யு, ஜாமியா பல்கலைக்கழகங்களின் போராட்டங்களையும் கடுமையாக ஒடுக்கியது பாசிச பா.ஜ.க. டெல்லியில் காவிகளால் திட்டமிட்டு நடத்தப்பட்ட கலவரத்தில் 50 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

தங்கள் மீது நிகழ்த்தப்படும் அநீதிகளுக்கு எதிராக இசுலாமியர்கள்திரண்டெழுந்து போராடினால்புல்டோசரைக் கொண்டு வீடுகளை இடித்துத்தள்ளுகிறது காவி அரசு. ராமநவமி கலவரங்களின் போதும், நபிகளை அவதூறாகப் பேசிய நுபுர் ஷர்மாவிற்கு எதிராகப் போராடிய போதும் புல்டோசரைக் கொண்டுவந்து போராட்டங்களை ஒடுக்கினார்கள் காவிகள். சட்ட விரோத மான இந்த இடிப்பை நீதிமன்றங்கள் ஆதரித்து நிற்கின்றன. இஸ்ரேலில் யூத இனவெறி அரசு பாலஸ்தீனிய மக்களை ஒடுக்குவதற்கு ஒப்பாக, இந்தியாவில் புல்டோசர் இடிப்பு திகழ்கிறது.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன் பிப்ரவரி 26 அன்று சர்வதேச அளவில் நடைபெற்ற இணையவழியிலான உச்சிமாநாட்டில், இந்தியா இனப்படுகொலைக்கான பாதையில் பயணிப்பதாக ஐநா மன்றத்தில் பொறுப்பு வகிக்கக்கூடியவர்களும் மற்றும் பலதுறை அறிவுஜீவிகள், ஆராய்ச்சியாளர்களும் தெரிவித்துள்ளனர். மோடி அரசால் நிறைவேற்றப்பட்ட குடியுரிமைத் திருத்தச் சட்டம் பாசிச ஜெர்மனியின் நுரெம்பர்க் சட்டத்துடன் ஒப்பிடத்தக்கது என்று இம்மாநாட்டில் கலந்துகொண்டவர்கள் கூறினார்கள்.

பசுப்பாதுகாப்புச் சட்டம், லவ் ஜிகாத் தடைச்சட்டம், மதமாற்றத் தடைச் சட்டம், பொதுச்சொத்து சேத தடுப்புச் சட்டம், குடியுரிமைத் திருத்தச் சட்டம், உத்தரப் பிரதேசத்தில் பொது இடங்களில் தொழுகை நடத்த தடை, ஹிஜாபுக்கு தடைவிதித்த நீதிமன்ற உத்தரவு என இசுலாமியர்களுக்கு எதிராக சட்டப்பூர்வமாகவே பாசிச நடவடிக்கைகள் ஏவப்படுகின்றன.

சப்கா சாத் சப்கா விகாஸ்” என்ற முழக்கத்தை (எல்லோருக்கும் எல்லாவற்றையும் கிடைக்கச் செய்வோம்) தொடர்ச்சியாக முன்வைக்கிறார் பிரதமர் மோடி. ஆனால் சிறுபான்மையின சமூக மாணவர்களின் கல்வி உரிமைகள் மீது மிக மோசமான தாக்குதல்கள் ஒன்றிய அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதுதான், அத்துறைக்கு ஒன்றிய அரசு ஒதுக்கும் நிதியில் இருந்து தெரிய வருகிறது.

சிறுபான்மையினர் சமூக மாணவர்களுக்கு ப்ரீ மெட்ரிக் உதவித்தொகை வழங்க 433 கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என 202324 நிதியாண்டில் அறிவிக்கப்பட்டது. அது 202425 நிதியாண்டில் 326.16 கோடி ரூபாயாகக் குறைந்தது. தற்போது நடப்பு நிதியாண்டில் (2025-26) 195.70 கோடி ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது. நிதி அறிவிப்பிலேயே இத்தகைய பாரபட்சத்தை பா. ஜ. க. அரசு நிகழ்த்தியிருக்கிறது என்றால், ஒதுக்கீடு குறித்த விவரங்கள் மேலும் அதிர்ச்சியைத் தருகின்றன. 2023 24 நிதியாண்டில் 95.83 கோடி ரூபாயும், 2024-25 நிதியா ண்டில் 90 கோடி ரூபாயும் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஒட்டுமொத்தமாக சிறுபான்மை யினர் கல்வி தொடர்பான 6 திட்டங்களுக்கு 2023-24 நிதியாண்டில் 1,689 கோடி ரூபாய் அறிவிக்கப்பட்டு, 428.74 கோடி ரூபாய் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. 2024-25 நிதியாண்டில் 1,575.72 கோடி ரூபாய் பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதில் 517.20 கோடி ரூபாய் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆண்டோ ஒதுக்கப்பட்டிருப்பதே 678.03 கோடி ரூபாய்தான் என்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.



**சைதை சாதிக்**
தலைமைக் கழகப் பேச்சாளர்

சிறுபான்மையின மாணவர்கள் கல்வி உரிமை மீது கூட ஏன் இத்தனை வஞ்சனைப் போக்கு கல்வியாளர்கள் பலரும் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

ஒட்டுமொத்த அரசுக் கட்டமைப்பும் முசுலீம் மக்களுக்கு எதிராகவும் காவி பாசிச கும்பலுக்கு ஆதரவாகவும் உருக்கி வார்க்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடு என்ற பெருமையைப் பெற்றிருக்கும் இந்தியாவில் மக்களாட்சியின் மாண்புக்குப் பெரும் அச்சுறுத்தலாக விளங்கப் போகும் வக்ஃபு வாரிய திருத்த சட்டம் அமல்படுத்தும் முனைப்பில் இருக்கிறது.

இதற்குத் தக்கதொரு எதிர்வினையாக நாட்டிலேயே முதன்முறையாகத் தமிழ்நாடு சட்டமன்றம் இந்த சட்டத்தை எதிர்த்து தமிழ் நாடு முதல்வர் திராவிட தலைவன் மு.க.ஸ்டாலின் முன்மொழிந்து அரசினர் தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றி இருக்கிறார்.

மண்டைக்காடு கலவரம் நடந்த போது பாபர் மசூதி இடிக்கப்பட்ட போது மதமாற்ற தடை சட்டம் கொண்டு கொண்டுவரப்பட்ட போது இந்திய குடியுரிமை சட்டத்திருத்தத்தை ரத்து செய்யக் கோரி தமிழ்நாடு சட்டப்பேரவையில் தீர்மானம் ‘

குடியுரிமை திருத்தச் சட்ட (CAA) திருத்தம் இலங்கை தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி இழைக்கப்பட்ட போதும் முத்தலாக் தடை சட்டம் கொண்டுவரப்பட்ட போது காஷ்மீர் 370 நீக்கிய போதும் இந்தியா முழுவதும் சிறுபான்மையினர் மீது தாக்குதல் நடந்த போது மாட்டுக்கறி விவகாரத்தில் அப்பாவிகள் படுகொலை செய்யப்பட்ட போது தன்னுடைய கடுமையான எதிர்ப்பை கண்டனத்தை தெரிவித்தவர் நம்முடைய முதல்வர்.

ஆனால் மோடியின் இஸ்லாமிய விரோத சட்டங்களை பிற பாஜக ஆளும் மாநிலங்கள் அமல்படுத்துவதற்கு முன் முண்டியடித்து அமல்படுத்துவதில் எடப்பாடி பழனிச்சாமி மும்முரம் காட்டியது கடந்த காலத்தில் நம் அனைவரும் அறிந்தது தான். எனவே இதில் நமக்கு எந்த ஆச்சர்யமும் இல்லை. இஸ்லாமியரின் மத உரிமைகளைப் பறிக்கும் வக்ஃபு சட்டம் (திருத்தம்)!

இஸ்லாமியரின் மத உரிமைகளைப் பறித்து அவர்களை இரண்டாம் தர குடிமக்களாக்குவதுடன், வக்ஃபு சொத்துகளை அபகரித்து பறிக்கும் நோக்கத்துடன் இன்றைய தினம் நாடாளுமன்றத்தில் வக்ஃபு சட்டம் 1995 (திருத்தம்) என்ற பெயரிலான மசோதாவை தாக்கல் செய்துள்ளது பாசிச மோடி அரசு.

பொதுவாக ஏற்கெனவே உள்ள சட்டத்தில் திருத்தங்கள் என்றால் ஒன்று, இரண்டு முதல் 10 திருத்தங்கள் வரை மேற்கொள்வார்கள். ஆனால் 40 திருத்தங்களை மேற்கொள்ளப் போகிறோம் என்று அறிவித்து அதன் மூலம் அரசியலமைப்புச் சட்டம் இஸ்லாமிய மற்றும் சிறுபான்மை மக்களுக்கு வழங்கியுள்ள மத உரிமைகளை ஒழித்துக் கட்டியுள்ளது பாசிச மோடி அரசு.

மேலும் இத்திருத்தங்கள் மூலம் நாடு முழுவதிலும் வக்ஃபு வாரியத்துக்கு சொந்தமான 7,85,934 சொத்துக்களும் பெரும் அபாயத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளன.

வக்ஃபு வாரிய சொத்துக்கள் மீது நடவடிக்கை எடுக்கும் உரிமையை இஸ்லாமியர் அல்லாதவருக்கு வழங்கியுள்ளது இந்த சட்டத் திருத்தம்.

வக்ஃபு வாரிய சொத்துகள் மீதான முடிவுகள் எடுக்கும் உரிமையை மாவட்ட ஆட்சியருக்கு வழங்கியதன் மூலம் வக்ஃபு சொத்துக்களை இஸ்லாமியர்களிடமிருந்து பறிக்கும் வக்ஃபு சட்டம் (திருத்தம்) மசோதாவை திரும்ப போற வலியுறுத்தி வரலாற்று சிறப்புமிக்க தீர்மானத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் சட்டமன்றத்தில் நிறைவேற்றி இருக்கிறார்.

சிறுபான்மை மக்களை காத்திட தெற்கில் இருந்து எழுந்திருக்கும் இந்த உரிமைக் குரல் ஒன்றியம் முழுவதிலும் எதிரொலிக்கட்டும். இந்தியாவின் ஜனநாயக நடைமுறைக்கு எதிராக இது போன்ற சட்டங்களை முன்னெடுக்கும் பாசிச பா.ஜ.க மற்றும் அதன் நிழல் கூட்டாளியான அ.இ.அ.தி.மு.க வை எதிர் வரும் சட்டமன்ற தேர்தலில் வீழ்த்தி சிறுபான்மை மக்களின் மாண்பை உரிமைகளை காப்போம்.

---

கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# அன்னம் தரும் அமுதகரம் 38வது நாள்!

## அம்பத்தூர் தெற்குப் பகுதியில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு உணவு வழங்கினார்!

*சென்னை, மார்ச் 30-*

*முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 38 ஆம் நாளான - கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளில் நேற்று (29.3.2025) அம்பத்தூர் தெற்கு பகுதி 1) அவ்வை நகர், பாடி (89வது வட்டம்) 2) வன்னியர் தெரு, பஜனை கோயில் தெரு சந்திப்பு, அம்பேத்கர் சிலை அருகில் (87வது வட்டம்) ஆகிய பகுதிகளில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு “தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்*



காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் மேயர் பிரியா ராஜன், ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, டிஎஸ்பி ராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர் நாகராஜ், பி.கே.மூர்த்தி.எம்.சி, டாக்டர்.ஜி சாந்தகுமாரி எம்.சி, எல் பி எஃப்.மோகன், டாக்டர் பூர்ணிமா எம்.சி, ரமேஷ் என்ற நீலகண்டன் எம்.சி து.ஆயிரம், ஜி.வி.நாகவள்ளி எம்.சி, கு.கிருஷ்ணமூர்த்தி வட்ட கழக செயலாளர்கள்: வி.ரவிந்தி ரன், பு.வீரா(எ) வீரராகவன், வெ.ராதாகிருஷ்ணன், த.கண்ணபிரான், எம்.கமல் எம்.சி, டி.பிரகாஷ் தயாளன், சி.சீனிவாசன், எம்.ஈ.சேகர் எம்.சி, நா. நெப்போலியன், ஆர்.டீக்கா, மு.சண்முகம், ஆ.சுந்தரராஜ், லோகநாதன், சு.மோக ன்குமார், மு.விஜய குமார், த.வ.லால், பி.செந்தில். ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S.முரளி, பெரம்பூர் R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்கு மார், L. சம்பத்குமார், க.பா. பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக மு ன்னோடிகள் கலந்து கொண்டனர்.



சென்னை தெற்கு மாவட்டம், வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் 100 நாள் வேலை உறுதி திட்டத்திற்கு நிதி வழங்காமல் தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து ஒன்றியச் செயலாளர் அயப்பாக்கம் அ.ம.துரைவீரமணி தலைமையில் எஸ்.பி.அருண் முன்னிலையில் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி கண்டன உரை ஆற்றினார். இதில் நோளம்பூர் வே.ராஜன் எம்.சி, அருணாச்சலம், இராமாபுரம் வ.செல்வகுமார் எம்.சி, எஸ்.பத்மபிரியா, இரா.வினோத், நா.தனசேகரன், பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள், ஒன்றியக் கழக நிர்வாகிகள் அலை கடலென திரண்டனர்.



100 நாள் வேலை உறுதி திட்டத்திற்கு நிதி வழங்காமல் தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் ஒன்றிய அரசை கண்டித்து திருவள்ளூர் மத்திய மாவட்டம் பூந்தமல்லி கிழக்கு ஒன்றியம், நசரத்பேட்டை ஊராட்சியில் ஒன்றிய கழக செயலாளர் ப.ச.கமலேஷ் முன்னிலையில் ஆ. கிருஷ்ணசாமி எம்.எல். ஏ. தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் நகரச் செயலாளர் ஜி.ஆர்.திருமலை உள்பட கழகத்தினர் பெருந்திரளாக கலந்து கொண்டு கண்டன கோஷமிட்டனர். உடன் மாவட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




காஞ்சி தெற்கு மாவட்டம் அச்சரப்பாக்கம் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் எல்.எண்டத்தூர், வேடந்தாங்கல் ஆகிய பகுதிகளில் தேசிய ஊரக வேலை திட்டத்தில் பணியாற்றிய மக்களுக்கு ஊதியம் வழங்காத ஒன்றிய அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றிய செயலாளர் ஜீ.தம்பு தலைமையில் நடைபெற்றது. இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் டி.ஆர்.நாராயணன், மோ.கோ.மணி, கலியுககண்ணதாசன், வேணு, பத்மா, பிரபாகர், இளங்கோ, சிவபெருமான், வேதாச்சலம்,தேவு, நிர்மலா தசரதன்,ராஜகோபால், வெங்கடேசன், சித்ரா, சரத்குமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.




தாம்பரம் மாநகரம் பெருங்களத்தூர் வடக்கு பகுதி தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சாபில் ரமலானை முன்னிட்டு நலத்திட்ட உதவிகளை பகுதிச் செயலாளர் டி .காமராஜ் தலைமையில் எஸ்.ஆர்.ராஜா எம்,எல்,ஏ. 2000 பேருக்கு வழங்கினார். உடன் எஸ்.இந்திரன், இரா.சுரேஷ், டி.ஆர்.கோபி, கி.வேல்மணி, எஸ்.ஜி.கருணாகரன், ஜா.ரவிக்குமார், ஆர்.ஜீவன், இரா.செல்வகுமார், ஆர்.செல்வ குமார், பி. காளியப்பன், டி.கே.தாமஸ், செ.சுரேஷ், ஆர்.அகஸ்டின், எஸ்.மகேஷ், இரா.ரத்தினகுமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.